# 22. வலிப்பு நோயும் மனநலமும் (Epilepsy)

மூளை நரம்புகள் செயல்படும் பொழுது ஏற்படும் மின்னலைகளில் திடீரென ஏற்படும் மாற்றங்களினால் வலிப்பு நோய் உண்டாகிறது. இவ்வலிப்பு நோய் பல்வேறு வகைப்படுகிறது.

அவைகள் முறையே :

1. சிறு வலிப்பு (Petitmal Epilepsy)
2. பெரு வலிப்பு (Grandmal Epilepsy)
3. மனநலக் குறைபாடு போல் தோற்றமளிக்கும் வலிப்பு நோய் (Psychomotor Epilepsy)
4. உடலில் ஏதாவது ஒரு பாகத்தை மட்டும் பாதிக்கும் வலிப்பு நோய் (Focal Epilepsy)

### சிறு வலிப்பு நோய் (Petitmal Epilepsy)

4 வயது முதல் 8 வயது வரை உள்ள குழந்தைகளுக்குச் சிறுவலிப்பு நோய் உண்டாகிறது. திடீரென்று குழந்தை ஒரு சில விநாடிகளுக்குச் சுயநினைவை இழப்பதால் உடலியக்கம் அச்சமயம் நின்று போய்விடுகிறது. உதாரணமாக: உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது திடீரெனக் குழந்தையின் பேச்சு தடைப்பட்டுப் போகலாம். எழுதிக்

கொண்டிருக்கும் குழந்தைக்குச் சிறு வலிப்பு நோய் வந்துள்ளது என்பதைக் குழந்தை எழுதிய பத்தியில் விட்டுப் போன வார்த்தைகளைக் கொண்டு நாம் அறியலாம்.

**பெருவலிப்பு நோய் (Grandmal Epilepsy)**

பெரு வலிப்பு நோய் என்று அழைக்கப்படும் இவ்வகை கால், கை வலிப்பு நோயைக் "காக்கா வலிப்பு" நோய் என்று நடைமுறையில் தவறாக நாம் பிரயோகிக்கிறோம். பெரும் கூச்சலுடன் சுயநினைவின்றி நோயாளி கீழே விழுந்த பின் கை, கால்களும் உடலில் உள்ள மற்ற தசைகளும் விறைத்த நிலைக்குச் சென்று விடும். சில விநாடிகளுக்குள் கை கால்களும் முகமும், உடலும் இடைவெளி விட்டு விட்டு வெட்டி வெட்டி இழுக்கும். அப்பொழுது நோயாளியின் வாயில் இருந்து நுரை தள்ளும். இந்த "இலுப்பு" ஒரு சில நிமிடங்களுக்குள் நின்று விடும். மயக்க நிலையில் நோயாளி தன் ஆடையிலேயே சிறுநீர் கழிக்கவோ, மலம் கழிக்கவோ கூடும். கீழே விழும் பொழுது தலையிலோ, உடலிலோ காயம் ஏற்படுவது இன்றி வலிப்பு ஏற்படும் பொழுது பற்களால் நாக்கிலோ, உதட்டிலோ காயம் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. வலிப்பு நின்றவுடன் நோயாளி சிறிது நேரம் ஆழ்ந்த உறக்கம் கொள்வார். உறக்கம் தெளிந்த உடன் ஒரு சிலர் மனக்குழப்பம் கொண்டு எங்கே இருக்கிறோம் என்று தெரியாமல் இங்கும் அங்கும் காரணம் இன்றி ஓடவும்,

அர்த்தம் இல்லாத வார்த்தைகளைப் பேசவும் செய்வர். பின்னர் முற்றிலுமாக நோயாளி மனத்தெளிவு பெற்ற உடன் வாந்தியோ, தலைவலியோ அவருக்கு உண்டாகலாம். இவ்வகை பெருவலிப்பு நோய் சில நாட்கள் இடைவெளி விட்டு விட்டு வரலாம். சிலருக்கு ஒரே நாளில் பலமுறை வரும். சுயநினைவு வந்தவுடன் வலிப்பு வந்த சமயத்தில் என்ன நடந்தது என்பதை நினைவுப்படுத்தி நோயாளியால் கூற இயலாது. ஆனால் சிலர் வலிப்பு நோய் வருவதற்கு முன்னர் நோய் வருவதற்கான சில முன் அறிகுறிகளை உணரலாம். இதனால் நோயாளிக்குச் சில புதுமையான உணர்வுகள் தோன்றலாம். உடல் மரத்தது போன்ற உணர்வு, வயிற்றுப் பிரட்டல், மாய வாசனை, மாய ஒலி அல்லது மாயக்காட்சிகள் ஆகிய போலிக்கண்ணோட்டங்களும் நோயாளிக்கு ஏற்படலாம்.

## மனநலக் குறைப்பாடு போல் உருவெடுக்கும் வலிப்பு நோய் Psychomotor Epilepsy (TLE/CPS)

இவ்வகை வலிப்பு நோயில் கை, கால்கள் வெட்டி வெட்டி இழுப்பதை நாம் காண முடியாது. ஆனால் மனநலக் குறைப்பாடு போல வலிப்பு நோயின் அறிகுறிகள் காணப்படும். வாயை மெல்லுவது போன்றோ, உதட்டைச் சப்பு கொட்டுவது போலவோ நோயாளி செய்வர். ஏதாவது ஒரு சில

வார்த்தைகளைப் பிணியாளர் உளறுவர். சுயநினைவின்றி மிரட்சி கலந்த பார்வையுடன் இங்கும் அங்கும் நடப்பதும், கைகளைப் பிசைவதுமாய்ப் பாதிக்கப்பட்டவர் இருப்பர். தேவையின்றிச் சில காரியங்களைச் சிலர் செய்வர். உதாரணமாக : சட்டைப் பித்தானை கழற்றுவதும் மீண்டும் போடுவதுமாக இருப்பர். ஒரு சிலர் காரணமின்றி வெறித்தனமான கோபம் கொள்வதும் உண்டு. வேறு சிலருக்கு இனங்காணமுடியாத அச்சமும் ஏற்படலாம். நோயாளிகளில் சிலர் தங்கள்உடலுறுப்புகள் சிறுத்து அல்லது பெருத்து விட்டதாக உணர்வர். எதிரில் உள்ள சிறு பொருட்கள் பெரிதாகவோ, பெரிய பொருட்கள் சிறிதாகவோ நோயாளிக்குத் தென்படலாம். அருகில் உள்ள பொருட்கள் தூரத்தில் இருப்பது போலவும், தூரத்தில் உள்ள பொருட்கள் அருகில் இருப்பது போலவும் நோயாளிக்குத் தோற்றம் அளிக்கலாம். அதுபோலவே புதிய இடங்கள் பழைய இடங்கள் போலவும், பழைய இடங்கள் அறிமுகம் இல்லாத இடங்கள் போலவும் நோயாளிக்குத் தோன்றலாம். குளிக்கும் பொழுதோ, சாப்பிடும் பொழுதோ இவ்வகை வலிப்பு வரலாம். ஒரு சில மணித்துளிகளுக்கே மேற்கூறிய அறிகுறிகள் நோயாளியிடத்துக் காணப்படும். வெகு சிலருக்கு ஓரிரு நாட்கள் நோயின் அறிகுறிகள் தொடர்ந்து காணப்படலாம். EEG வரைபடம் இவ்வகை வலிப்பு நோயைச் சுட்டிக் காட்டும் என்றாலும் வலிப்பு நோயை

நேரில் கண்ட உறவினர் நோயாளியின் வலிப்பு நோயைக் குறித்துத் தரும் வர்ணனையே மருத்துவர் நோயாளியினுடைய வலிப்பு நோயைக் கண்டறிந்து சிகிச்சை செய்ய ஏதுவாக இருக்கும்.

## உடலில் ஏதாவது ஒரு பாகத்தை மட்டும் பாதிக்கும் வலிப்பு நோய் (Focal Epilepsy)

இவ்வகையில் உடலின் ஏதாவது ஒரு பகுதியை மட்டும் வலிப்பு நோய் பாதிக்கிறது.. உதாரணமாக : வலது கை விரலிலோ அல்லது வலது கையிலோ தசை துடிப்பு ஏற்படலாம். பின்னர் மற்ற உறுப்புகளுக்கு தசை துடிப்பு பரவலாம். (அதாவது கைத் தசைகளில் இருந்து தோள்பட்டை தசைகளுக்கு பரவுவது) இவ்வகை வலிப்பு நோயில் நோயாளியின் சுயநினைவு பாதிக்கப்படுவது இல்லை. சிலருக்குப் பாதிக்கப்பட்ட உறுப்பில் விநோதமான உணர்வுகள்உருவாகும். (மரத்து போகுதல் போன்ற உணர்வு, மின்சாரம் பாய்தல் போன்ற உணர்வு) இவ்வகை வலிப்பு நோயாளிகளில் ஒரு சிலருக்கு வலிப்பு உண்டாகும் உடல் பகுதியைக் கட்டுப்படுத்தும் மூளை நரம்பு மண்டலத்தில் இரத்தக்கட்டியோ, புற்றுநோய்க்கட்டியோ இருக்க வாய்ப்பு இருப்பதால் மருத்துவரின் ஆலோசனை பேரில் மூளையில் சிடி ஸ்கேன் படம் எடுத்துப் பார்ப்பது நல்லது.

## திடீரெனத் தசை சுண்டி இழுப்பு - வலிப்பு நோய் (Myoclonus Epilepsy)

இவ்வகை வலிப்பு நோயில் திடீரென உடலிலோ அல்லது கை காலிலோ உள்ள தசைகள் சுண்டுவதால் உடலோ கை, காலோ "படாரென" தூக்கி வாரிப் போடும்.

மூளை நரம்புகள் செயல்பாட்டின் பொழுது ஏற்படும் மின்னலைகளில் திடீரென ஏற்படும் மாற்றங்களைத் தவிர வலிப்பு நோய் பல்வேறு இதர காரணங்களாலும் ஏற்படலாம்.

## வலிப்பு நோய் உண்டாகும் பல்வேறு இதர சூழ்நிலைகள்

1. குழந்தைகளுக்குக் கடுமையான ஜுர வேகத்தில் உண்டாகும் பெருவலிப்பு நோய் (Febrile Fits)

2. மூளைக் காய்ச்சல்

3. மூளையில் கட்டி - காசநோய்க்கட்டி, மூளையில் சீழ்கட்டி, மூளையில் புற்றுநோய்க்கட்டி, மூளையை நாடாப் புழு தாக்குதலால் உண்டாகும் கட்டி.

4. செரிபெரல் பால்சி (Cerebral Palsy)

5. மூளையில் இரத்த நாளக்கட்டி, இரத்தக் கசிவு, இரத்தக் குழாய் அடைப்பு

6. கல்லீரல், சிறுநீரகக் கோளாறு

7. தலைக்காயம்

8. கள், சாராயம் மற்றும் போதை மருந்துப் பழக்கம்.

9. உடலில் கால்சியம், பொட்டாசியம் போன்றவற்றின் சமச்சீர் அளவு மாறும் பொழுதும் வலிப்பு நோய் ஏற்படலாம்.

## வலிப்பு நோயாளிகளுக்கு வரும் மனநலக் குறைபாடுகள்

### மனத்தளர்ச்சி / சந்தேகநோய் :

நீண்ட காலம் வலிப்பு நோயைக் கட்டுப்படுத்த மாத்திரையை உட்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுவதாலும் வலிப்பு நோய் குணமாகும் வரை சராசரி மனிதர்களுக்கு உள்ள சில சுதந்திரமான விசயங்களை இழப்பதாலும் (உதாரணமாக : நீச்சல் அடிப்பது, வாகனம் ஓட்டுவது) வலிப்பு நோயாளி என்று சமூகத்தால் முத்திரை குத்தப்படுவதாலும் வலிப்பு நோய் உள்ளவர் மனத்தளர்ச்சி நோய்க்கு

ஆளாக வாய்ப்புகள் அதிகம். மேலும் மனஎழுச்சி நோயும், சந்தேக நோயும் வலிப்பு நோய் உள்ளவர்களுக்கு வரலாம்.

ஹிஸ்டீரியா (மனச்சிக்கல்) நோய் குழந்தைகளிடமும், பெண்களிடமும் சில சமயங்களில் "வலிப்பு மாதிரி" நோயாக உருவெடுக்கலாம். இவர்களுக்கு வலிப்பு நோய் மருந்துகளைத் தரக்கூடாது. மாறாக மனநல மருத்துவரின் சிகிச்சை தேவையாகும்.

## வலிப்பு நோயாளிகளுக்கும் அவர்தம் உறவினர்களுக்கும் உரிய பொதுவான ஆலோசனைகள்

1. வலிப்பு நோய்க்கு மருந்து உள்ளது.
2. வலிப்பு நோய், பேய், பிசாசு, பில்லி, சூனியத்தால் வருவது அல்ல.
3. வலிப்பு நோயைக் கட்டுப்படுத்தச் சூடு போடுதல் கூடாது.
4. வலிப்பை நிறுத்த இரும்புச் சாவி கொடுப்பதால் பலன் இல்லை.
5. வலிப்பு நோயாளிக்கு நல்ல உறக்கம் தேவை.
6. வலிப்பு நோயாளிகள் பட்டினி இருக்கக் கூடாது.
7. வலிப்பு நோயாளிகள் மருத்துவரின் அனுமதி இன்றி மாத்திரையின் அளவைக் கூட்டவோ, குறைக்கவோ கூடாது.

வலிப்பு நோய் குணமாகும் வரை நீச்சல் அடிப்பதோ, வண்டி அல்லது வாகனம் ஓட்டுதலோ கூடாது.

9. நோயாளிக்கு வலிப்பு ஏற்படும் தருணத்தில் அவர்தம் சட்டையை அருகில் இருப்போர் தளர்த்தி விட வேண்டும். வாயில் பொங்கும் நுரை சுவாசப் பாதையை அடைக்காத வண்ணம் நோயாளியை ஒரு பக்கமாகச் சரித்துப் படுக்கச் செய்ய வேண்டும். மேலும் ஜன்னல்களைத் திறந்து விட்டு நல்ல காற்றோட்டம் கிடைக்கச் செய்தல் வேண்டும். நாக்கு கடிபடாமல் தடுக்கத் தாடைகளுக்கு இடையே சிறிய, நீண்ட சாக்லெட் வடிவ ரப்பர் பொருளை (Rubber Mouth Piece) வைக்கலாம். கை, கால்கள் வெட்டி இழுக்கும் பொழுது எலும்பு முறிவு, மூட்டு விலகிப் போவதைத் தடுக்க வெட்டி இழுக்கும் கை, கால்களை அணைத்துப் பிடித்தல் வேண்டும். பிணியாளர் முற்றிலும் சுயநினைவு அடையும்வரை அருந்தவோ, உண்ணவோ, பானமோ, உணவுப் பொருட்களோ அளித்தல் கூடாது.